முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 992

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.06.2022, வெள்ளிக்கிழமை

1. கலியுகம் காக்க வந்த ஞானியே
கந்தப்பெருமான் எந்தன் மகா சூட்சுமமே
அழியாமை தருகின்ற சக்திகொண்ட
அரங்கனே கலியுகத்தின் காப்பே
2. காப்பான மகா சக்திகளெல்லாம் இணைய
கருணையோடு தருமம் புரிகின்ற மாதவசியே
சுப்பன் யான் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 03 நாள், 17.06.2022 வெள்ளிக்கிழமை)
சுருதிபடி அருட்சுவடி வழி இனிதே ஆற்றலாக வழங்குவேன்
3. வழங்கவே அரங்கனின் தர்மம் வையகத்தை காப்பதோடு
வளம்தரும் ஞான பூமி ஆக்கக்கூடும்
பலமான அரங்கனின் உபதேசம் ஏற்ற மக்கள் வழி
பாருலகம் ஞானவான்கள் என்கின்ற படை நிரம்பி
4. நிரம்பியே ஞானவான்கள் கூடிய சபையாக நிலவுலகம்
ஞான ஆட்சிதனை காணும்
தடையின்றி அரங்கன் தர்மமும் தவமும்
தரணி எங்கும் மகா சக்தியாக வலம்வர
5. வருக வருகவே வையகம் தன்னில்
வடிவேலன் என் ஆட்சி முழுமை ஞானமாகப் பரவி
பரவியே அற்புதம் நிகழ்த்தும்
பாருலகம் பாதுகாப்பு நிறைந்து காணக்கூடும்
6. கூடவே அரங்கன் தொடர்பு கூட்டி
குவலயத்தார் ஞானவழி வர
ஈடேற்றம் ஞான ஆட்சியாக மாறும்
இயம்பிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–